**இணை ஆணையர் (மா.வ.)(முகூபொ), செங்கல்பட்டு நுண்ணறிவு அவர்களின் செயல்முறைகள்,**

**முன்னிலை : திரு. ந.இராஜசேகர், எம்.எஸ்.சி.,டி.எம்.இ.,**
**இடம்.எண்.870/2எ, 1 தளம், காஞ்சிபுரம் நெடுஞ்சாலை, திம்மாவரம்,**
**செங்கல்பட்டு-603101**

---

செ.மு.ஆணை ந.க.381/2023/அ2 நாள். 08.11.2024

பொருள் : பொதுப்பணிகள் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் - தொகுதி-IV - (தேர்வு நடந்த நாள் 24.07.2022) - நேரடி நியமனம் - தமிழ்நாடு அமைச்சுப் பணி - வணிகவரித்துறை - செங்கல்பட்டு நுண்ணறிவு பிரிவு - திரு. மு.பிரதாப், இளநிலை உதவியாளர் - தகுதிகாண் பருவ துவக்கம் - பணிவரன்முறை செய்து ஆணையிடல் - தொடர்பாக.

பார்வை :
1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய குறிப்பாணை எண்.453/PSD-B1/2022, நாள்.25.07.2023
2. இணை ஆணையர்(மாவ), சென்னை(தெற்கு) கோட்டம் அவர்களின் செயல்முறை ந.க.5983/2023/அ2, நாள்-21.09.2023
3. இணை ஆணையர் (மாவ), செங்கல்பட்டு கோட்டம் அவர்களின் செயல்முறை நக.1339/2023/அ2, நாள். 27.09.2023.
4. இணை ஆணையர் (மாவ), செங்கல்பட்டு நுண்ணறிவு அவர்களின் செயல்முறை நக.381/2024/அ2, நாள். 15.02.2024.
5. இணை ஆணையர் (மாவ), செங்கல்பட்டு கோட்டம் அவர்களின் செயல்முறை நக.1339/2024/அ1, நாள். 29.02.2024.

*****

**ஆணை :**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால், நடத்தப்பட்ட தொகுதி-IV தேர்வு (தேர்வு நடந்த நாள் 24.07.2022) மூலம் திரு.மு.பிரதாப், என்பவர் இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்டு பார்வை 2 மற்றும் 3-ல் காணும் இணை ஆணையர் (மாவ), செங்கல்பட்டு கோட்டம் அவர்களின் ஆணையின் வாயிலாக இணை ஆணையர் (மாவ),செங்கல்பட்டு கோட்ட அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 04.10.2023 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார். மேலும் தனியாளர் பார்வை 4 மற்றும் 5ல்காணும் செயல்முறை ஆணைமூலம் பணிமாறுதல் செய்யப்பட்டு இவ்வலுவலகத்தில் 01.03.2024

முற்பகல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்துள்ளார். தனியாளர் இளநிலை உதவியாளர் நிலையில் பணியில் சேர்ந்த நாளான 04.10.2023 முதல் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

தனியாளர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளில் இருந்து மூன்றாண்டுகளுக்குட்பட்ட தொடர்ச்சியான ஈராண்டு காலம், தகுதி காண் பருவ காலமாக நிர்ணயிக்கப்படுகிறது. தமிழ்நாடு அமைச்சு பணி விதிகளில் குறிப்பிட்டுள்ளவாறு தகுதிகாண் பருவ காலத்தில் தனியாளர் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

இந்த பணிவரன்முறை ஆணையானது தொகுதி -IV தேர்வு (தேர்வு நடந்த நாள் 24.07.2022) தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் சென்னை உயர் நீதி மன்றத்தின் மதுரை கிளையில் நிலுவையில் உள்ள நீதிப்பேராணை மனுக்களின் மீதான தீர்ப்பினைப் பொறுத்து மாறுதலுக்குட்பட்டது.

ஒம்/- ந.இராஜசேகர்,
இணை ஆணையர்(மாவ)(முகூபொ),
செங்கல்பட்டு நுண்ணறிவு.

பெறுநர்

திரு. மு.பிரதாப், இளநிலை உதவியாளர்,
இணை ஆணையர்(மாவ) அலுவலகம், செங்கல்பட்டு நுண்ணறிவு கோட்டம், செங்கலப்பட்டு

நகல்

1. இணை ஆணையர்(மாவ), செங்கல்பட்டு கோட்டம், செங்கல்பட்டு.
2. இருப்புக் கோப்பு (ஆ2) -1
3. உதிரி -1.

//உண்மை நகல்//

மேலாளர் 08/11/24